



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | செப்டம்பர் 19, 2019 | புரட்சி 18 | முழக்கம் 36 | விலை: ரூ.3.00


## பேனர்களும் நடைபாதை கோயில்களும்

சென்னையில் பேனர் வைக்கத் தடை செய்யப்பட்டிருந்தாலும் ஆளும் கட்சியினருக்கு அது பொருந்தாது. அ.இ.அ.தி.மு.க. பிரமுகர் ஒருவர் தனது வீட்டுத் திருமணத்துக்கு வைத்திருந்த பேனர் சரிந்து வேளச்சேரி பகுதியில் சுபஸ்ரீ என்ற இளம்பெண் பொறியாளர் உயிர்ப் பலியாகிவிட்டார். ஸ்கூட்டரில் வந்த அந்தப் பெண் மீது பேனர் விழ, பெண் கீழே விழ, எப்போதும் ‘உயிர்க் கொல்லி’யாகப் பறக்கும் தண்ணீர் லாரி, அந்தப் பெண் மீது ஏறி உயிரிழந்து விட்டார். நெஞ்சை உலுக்கி விட்டது கொடூரமான இந்த இளம் பெண்ணின் மரணம்.

‘பேனரை’ அச்சடித்துக் கொடுத்த அச்சகத்துக்கு சீல் வைத்திருக்கிறது, தமிழகக் காவல் துறை. பேனரைத் தயாரித்துக் கொடுத்த அச்சக உரிமையாளருக்கு அது சாலையில் சட்ட விரோதமாக வைக்கப்பட இருக்கிறது என்பது எப்படி தெரியும் என்று யாரும் கேட்டுவிடக் கூடாது. துணி பேனரை அச்சடிக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்தவரை தேடிப் பிடித்து கைது செய்யாமல் விட்டார்களே, என்று நிம்மதி அடைய வேண்டியதுதான். பேனர்கள் வைக்கக் கூடாது என்று பல்வேறு கட்சித் தலைவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள், வரவேற்க வேண்டியதுதான்.

ஆனால், ஒரு கேள்வியை எழுப்ப வேண்டியிருக்கிறது. பேனர்கள்கூட தற்காலிக மானவைதான். ஆனால் நிரந்தரமாக போக்குவரத்துக்கு இடையூறாக விபத்துகளை உருவாக்கும் நடைபாதைக் கோயில்களைக் கட்டி வைத்திருக்கிறார்களே! அவற்றை அப்புறப்படுத்த வேண்டாமா? இந்தக் கோயில்களை அகற்ற வேண்டும் என்று உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்து ஆண்டுகள் பல ஓடி விட்டன. உச்சநீதி மன்றத்தை அவமதிப்பதுபோல் நடைபாதைக் கோயில்களை அகற்ற ஆட்சியாளர்கள் முன்வரவில்லை. அப்படியே ஒரு சில இடங்களில் அகற்ற முயற்சித்தாலும் அங்கே ‘இந்து மதக் காவலர்கள்’ என்ற போர்வையில் ‘ஜெய் ஸ்ரீராம்; ஜெய் காளி’ என்று கூச்சல் போட்டுக் கொண்டு ஒரு கும்பல் ஓடி வந்து கலவரம் செய்து தடுக்கிறது.

போக்குவரத்துக்கு இடையூறாக, நடைபாதையில் இந்து கோயில்களைக் கட்டலாம் என்று சாஸ்திரமோ ஆகமமோ கூறுகிறதா?

பேனர்களை வைக்கக் கூடாது என்று கட்சிக் காரர்களுக்கு அறிவுறுத்தும் தலைவர்கள் நடைபாதைக் கோயில்களையும் கட்டாதீர்கள்; அதற்கு வசூல் வேட்டை நடத்தாதீர்கள் என்று ஏன் அறிவுறுத்தக் கூடாது? பக்தி என்று வந்து விட்டால் சட்டம் கட்சிகளையும் வாயடைக்கச் செய்து விடுமா?

# பெண்ணடிமைப் பண்பாடுகளை பொது வெளிகளில் தகர்த்தவர் பெரியார்

*பெரியார் பிறந்த நாளையொட்டி ‘தமிழ் இந்து’வின் ‘பெண் இன்று’ வார சிறப்பு மலரில் பிருந்தா சீனிவாசன் எழுதிய கட்டுரை.*

பிறந்தநாள், நினைவுநாள் போன்ற நாட்களில் ஆண்டுக்கொரு முறை சடங்குக்காக மட்டும் நினைவுகூரப்பட வேண்டியவர் அல்ல பெரியார். ஒவ்வொரு நாளும் நம் ஒவ்வொரு செயலிலும் பெரியார் நமக்குத் தேவைப்படுகிறார். காரணம், சாதிய ஒடுக்குமுறைகளும் ஆணாதிக்கமும் மேலோங்கியிருந்த காலத்திலேயே பெண்ணுரிமையைப் பேசியவர் அவர்.

அறிவிலும் சிந்தனையிலும் நாம் முன்னேறி விட்டதாக நினைத்துக்கொண்டிருக்கும் இந்த நூற்றாண்டிலேயே பெண்ணுரிமை குறித்துப் பேசுவது பாவச்செயல் போல் கருதப்படுகையில் நூறு ஆண்டுகளுக்கு முன்பே பெண்ணுரிமைச் சிந்தனையைப் பரப்பியதாலேயே அவர் பெரியாராக உயர்ந்துநிற்கிறார்.

**பெண்களுக்கும் எதிரி :** பண்பாடு, கலாச்சாரம் போன்றவை பெண்களை எப்படி காலங்கலாமாக அடிமைப் படுத்தி வைத்திருக்கின்றன என்பதைப் பொதுவெளியில் போட்டுடைத்தவர் அவர். அவரது ஒவ்வொரு சொல்லும் செயலும் விவாதத்தையும் சர்ச்சையையும் கிளப்பின. ஆனால், எதைக் கண்டும் சளைக்காமல் கொண்ட கொள்கையில் உறுதியாக நின்றார். ஆண்களைச் சாராமல் தனித்து வாழும் உறுதி பெண்களுக்கு இருக்கையில் ஏன் தேவை யில்லாத சங்கிலிகளைப் பூட்டிக்கொள்ள வேண்டும் என்ற அவரது கேள்வி, ஏராளமான பெண்களை பெண்ணியத்தை நோக்கி நகர்த்தியது.

குடும்ப அமைப்பையும் அதில் மலிந்து கிடக்கிற பிற்போக்குத்தனங்களையும் மூடப்பழக்க வழக்கங் களையும் விமர்சித்தார். ஆணுக்கு அடங்கி நடப்பது தான் பெண்ணுக்கு அழகு என்று போதிக்கப்பட்டு வந்த பெண்கள் மத்தியில் நின்றுகொண்டு, ஆண்களால் செய்யக்கூடிய அனைத்தையும் பெண்களாலும் செய்ய முடியும் என்று சொன்னார். அந்த வகையில் ஆணாதிக்கச் சிந்தனை கொண்ட ஆண்களுக்கு மட்டுமல்ல; பெண்களுக்குமே பெரியார் எதிரியானார்.

**பால்ய விவாக எதிர்ப்பு :** ‘இளம் வயது விவாக விலக்கு மசோதா’ குறித்து 1928இல் தேசிய அளவில் விவாதம் நடத்தப்பட்டபோது அதை எதிர்த்துக் குரல்கொடுத்த தமிழகப் பிரதிநிதிகளின் செயலைக் கண்டித்து ‘குடி அரசு’ இதழில் எழுதினார் பெரியார். குறிப்பாக, “பால்ய விவாகம் இல்லாவிட்டால் உண்மையான கற்பு என்பது சாத்திய மில்லை. புருஷர்களுக்குச் சிறைத் தண்டனை அளித்து விடுவதால் பெண்களின் நடத்தை அதிகக் கேவலமாகிவிடும்” என்று எம்.கே. ஆச்சாரியா பேசியதைச் சுட்டிக்காட்டி, ‘இது மனிதத் தன்மைக்கு ஏற்றதாகுமா? சகோதரிகளுக்குச் செய்யும் நியாயம் ஆகுமா?’ என எழுதியதுடன், தேசியம் என்று சொல்லி ஏமாற்றப் பார்க்கும் வீணர்களின் வலையில் இருந்து தப்பிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் எழுதினார். உண்மையான சீர்திருத்தத்துக்கும் சுயமரியாதைக்கும் ஏற்ற கொள்கைகளில் ஈடுபட்டு, அரசியலையும் சமூக இயலையும் கைப்பற்றி அதைத் தக்க வழியில் திருப்ப வேண்டியது அவசியம் என்றார்.

**மாற்றம் தரும் மறுமணம் :** கணவனை இழந்த பெண்கள் உடன்கட்டை ஏறும் வழக்கம் ஒழிக்கப் பட்டுவிட்ட நாட்டில் ஏன் இன்னும் விதவை மறுமணம் மறுக்கப்படுகிறது என்ற கேள்வி பெரியாருக்கு இருந்தது. கைம்பெண்கள் மறுமணம் செய்துகொள்வது கற்புக்குப் பங்கம் விளைவிப்பது என்ற கருத்தை அவர் மறுத்தார். இதைப் பேச்சுடனும் எழுத்துடனும் மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் செயல்படுத்தியும் இருப்பதாக 1926இல் ‘குடி அரசு’ கட்டுரையில் சொல்லியிருக்கிறார்.

திருமணம் செய்துகொடுத்த தன் தங்கையின் பத்து வயது மகள் 60-வது நாளில் அவளுடைய 13 வயது கணவனை இழந்துவிடுகிறாள். அந்தப் பெண் ஓரளவு பக்குவப்பட்டதும் தன் மைத்துனரின் துணையோடு மறுமணம் செய்து வைத்ததையும் அதனால் குடும்பத்தினரின் கோபத்துக்கு ஆளானதையும் அந்தக் கட்டுரையில் பெரியார் குறிப்பிட்டிருக்கிறார். மனைவி இறந்தால் கணவன் மறுமணம் செய்து கொள்வது வழக்கமாகிவிட்ட நம் சமூகத்தில் கைம்பெண் மறுமணம் என்பது இன்றும் கானல்நீராகத்தான் இருக்கிறது.

**சொத்துரிமை அவசியம் :** பெண்களுக்குச் சம உரிமை வேண்டும் என்றவர் சொத்துரிமையை ஏன் பெண்கள் கைக் கொள்ளவில்லை என்று கேட்டார். சுயமரியாதைத் திருமணம் செய்துகொள்வதாலேயே ஒருவர் பகுத்தறிவாளர் ஆகிவிட முடியாது என்று தன் கழகத்தாரிடமே சொன்ன அவர், “அதிக நகை போடாமலும் தாலி கட்டாமலும் மூடச் சடங்குகள் இல்லாமலும் நடைபெற்ற திருமணம் சுயமரியாதைத் திருமணமாகிவிடாது.

பெண்ணின் பெற்றோர் இப்பெண்ணுக்குத் தங்கள் சொத்தில் ஒரு பாகம் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். புருஷர்களைப் போலவே பெண்களுக்குச் சொத்துரிமை உண்டு என்கிற கொள்கையை ஏற்காவிட்டால் எப்படி அவர்கள் சுயமரியாதை உடைய வர்களாவார்கள்?” என்று விருதுநகரில் வன்னிய நாடார் இல்லத் திருமணத்தில் 1930-ல் பேசியிருக்கிறார் பெரியார்.

**அடிமையல்ல, எஜமானி :** வீட்டு வேலை செய்வதுதான் தங்கள் கடமை என்பதைப் பெண்கள் மறந்துவிட்டுப் புருஷனுக்குத் தலைவியாக இருப்பதும் குடும்பத்துக்கு எஜமானியாக இருப்பதும் தங்கள் கடமை என்று நினைத்துச் செயல்பட வேண்டும் என்று சொன்னவர் அவர். வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்காமல் தினமுமோ வாரத்துக்கு ஒன்றிரண்டு நாட்களோ பொது இடத்தில் கூடிப் பத்திரிகைகளைப் படிக்க வேண்டும்; படிக்காதவர்களுக்குப் படித்தவர்கள் படித்துக்காட்ட வேண்டும் என்று சொன்னார். பெரியார் இப்படிச் சொல்லி 90 ஆண்டுகள் கடந்த நிலையில் பொது வெளியில் அச்சமும் தடையும் இன்றி இயங்குவது பெண்களுக்குச் சாத்தியப்பட்டிருக்கிறதா?

**பண்டங்களா பெண்கள்? :** பெண்கள் தங்களைக் காட்சிப் பொருளாக்கிக் கொள்வதைக் கேள்விக்குள்ளாக்கினார். ‘பெண்களுக்கு மக்கள் மனத்தை ஈர்க்கும்படியான நகை, துணிமணி, ஆபரணம் ஏன் என எந்தப் பெண்ணாவது, பெற்றோராவது, ‘கட்டினவ’ராவது சிந்திக்கிறார்களா? பெண்கள் அஃறிணைப் பொருள் என்பதற்கு இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும்? தன்னை அலங்கரித்துக் கொண்டு பிறர் கவனத்தைத் தன் மீது திருப்புவது இழிவு என்றும் அநாகரிகம் என்றும் யாருக்கும் தோன்றாததற்குக் காரணம் அவர்கள் போகப் பொருள் என்ற கருத்தேயாகும்’ என்று சொல்லும் பெரியார், “பெண்கள் நகை மாட்டும் ஸ்டேண்டா?” எனக் கேட்கிறார்.

அதற்காக டீசென்ஸி வேண்டாம் எனத் தான் சொல்லவில்லை என்கிறவர், “சுத்தமும் கண்ணுக்கு வெறுப்பில்லாத தன்மையும் ஃபேஷன் அலங்காரத்தால் அல்ல; சாதாரண குறைந்த தன்மையினால் முடியும் என்றும் உணர வேண்டும்” என்று சொல்லி பகுத்தறிவும் சுயமரியாதையுமே பெண்களின் அழகு என்பதை உணர்த்தினார்.

பெண்களை அடிமைப்படுத்தும் சனாதன முறைகளை அடியோடு எதிர்த்தார். கற்பு நிலையைக் கேள்விக்குள்ளாக்கியவர், கற்பு அவசியம் என்றால் பிறப்பால் சமமாக இருக்கும் இருபாலருக்கும் அது வேண்டும்தானே என்றார். குழந்தைகள் பிறப்பது கடவுளின் வரமாகக் கருதப்பட்டுவந்த காலத்தில் கர்ப்பத்தடையைப் பரிந்துரைத்த சான்றோர் அவர்.

**ஆண்மையும் பெண்மையும் :** ஆண்மை என்பதே கற்பிதம் என்பதை ஆண்கள் உணர்ந்தால்தான் பெண்மை என்பதும் கற்பிதம் என்பதைப் புரிந்துகொள்வார்கள். ‘பெண்கள், ஆண்களுக்கு அடிமைகள் அல்ல; அவர்களும் ஆண்களைப் போலவே சுதந்திரமாக இருக்கத் தகுந்தவர்கள் என்பதை நாம் முதலில் தீர்மானம் செய்துகொள்ள வேண்டும்’ என்று ஆண்களிடம் சொல்கிறார் பெரியார். பெண்மை தழைக்க வேண்டும் என நாம் விரும்பினால் முதலில் ஆண்மை அழிய வேண்டும் என்றவரும் பெரியாரே.

ஆண்கள், பெண்களின் விடுதலைக்குப் பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் வளர்வதுடன் பெண்கள் என்றுமே விடுதலை பெற முடியாது என்றார். “எங்காவது பூனைகளால் எலிகளுக்கு விடுதலை உண்டாகுமா? நரிகளால் ஆடு, கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா?” எனக் கேட்கும் பெரியார், பெண் விடுதலைக்காக ஆண்கள் பேசுவதும் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சியே என்கிறார்.

ஆணாக இருப்பதால் தான் சொல்வதைக்கூட கேட்கத் தேவையில்லை என்று சொல்லும் அவர், பெண்கள் தங்கள் அறிவு சொல்வதைத்தான் கேட்க வேண்டும் என்றார். பெண்கள் பகுத்தறிவும் சுயமரியாதையும் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பது அவர் கண்ட கனவுகளில் ஒன்று. பெரியார் சொன்னதுபோல அதை நிறைவேற்றி உயர்வது பெண்களாகிய நம் கைகளில்தான் இருக்கிறது.

## அமித்ஷாவின் வெறிப் பேச்சு

# 1929லேயே இந்தியை எதிர்த்தார் பெரியார்

*‘இந்தியாவின் அடையாளம் இந்தி’ என்ற அமித்ஷா கருத்துக்கு கடும் எதிர்ப்புகள் தென்னகம் முழுவதும் எழுந்துள்ளது.*

*இந்தித் திணிப்பை எதிர்த்தும் அதைத் திணிப்பதன் நோக்கத்தை விளக்கியும் 1929ஆம் ஆண்டிலேயே 90 ஆண்டுகளுக்கு முன்பே பெரியார் எழுதிய கட்டுரை.*

சமீபத்தில் சென்னை மாகாணத்திற்கு சென்னைப் பார்ப்பனர்கள் வடநாட்டுத் தலைவர்கள் என்பவர்களை ஹிந்திப் பிரசாரம் என்னும் பேரால் பார்ப்பனப் பிரசாரம் செய்ய அழைத்துவரப் போகின்றதாகத் தெரிய வருகின்றது. இந்த வழியில் பார்ப்பனப் பிரசாரம் செய்வதோடு மாத்திரமல்லாமல் பார்ப்பனரல்லாத மூடர்களிடமிருந்து சுமார் ஒரு லக்ஷம் ரூபாயாவது கொள்ளை அடிக்கக் கருதியிருக்கின்றார்கள் என்பதாகத் தெரிய வருகின்றது.

கதரின் பேரால் அடித்த கொள்ளையாகிய ஐந்து லக்ஷம் ரூபாய் இன்னும் ஜீரணம் ஆகாமல் அப்படியே கல்லுப் போல் பார்ப்பார்கள் வயிற்றில் கிடக்க, சென்ற வருட காங்கிரசின் பேரால் கொள்ளை அடித்த சுமார் 20,30 ஆயிரம் ரூபாயும் அப்படியே கிடக்க இப்போது இன்னும் ஒரு லக்ஷம் ரூபாய்க்கு திட்டம் போட்டு சில பார்ப்பனர் வெளிக் கிளம்பியிருப்பது பார்ப்பனர்களின் சாமர்த்தியமா அல்லது பார்ப்பனரல்லாதார்களின் முட்டாள்தனமா என்பது நமக்கு பூரணமாய் விளங்கவில்லை யானாலும் ஒருவாறு இது பார்ப்பனரல்லாதார்களின் முட்டாள் தனமான இளிச்சவாய்த் தன்மை என்றே சொல்லவேண்டும். பார்ப்பனர்கள் வந்து எதற்காகப் பணம் வேண்டுமென்று கேட்டாலும் நம்மவர்கள் கொடுக்கத் தயாராயிருக்கின்றார்கள். வருணாசிரம மகாநாடு நடத்த பார்ப்பனர்களுக்கு பணம் கொடுக்கும் பார்ப்பன ரல்லாதவர்கள் இந்திக்கு பணம் கொடுப்பது ஓர் அதிசயமல்ல.

எனவே, பணம் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் இந்தியினுடையவும் இந்தி பிரசாரத்தினுடையவும் புரட்டையாவது பொது ஜனங்கள் அறியட்டுமென்றே இதை எழுகின்றோம். முதலாவது இந்தி பாஷை என்றால் என்ன? அதற்கும் தமிழ் நாட்டு மக்களுக்கும் என்ன சம்மந்தம்? அதை படித்ததினால் தமிழ்நாட்டு மக்களுக்கு ஏற்படும் பயன் என்ன? என்பது போன்றவைகளை முதலில் கவனிப்போம். பிறகு இந்தி பாஷை என்பதை அகில இந்திய பாஷையாகக் கருதவேண்டும் என்பது பற்றிப் பின்னால் யோசிப்போம்.

இந்தி பாஷை படித்த தமிழ் மக்களுக்கு அதனால் ஏற்படும் பயன் என்ன? இதுவரை தமிழ்நாட்டில் காங்கிரஸ் பணத்திலிருந்தும் மற்றும் பொது மக்களிடமிருந்தும் இந்திக்காக செலவு செய்யப்பட்ட பணத்தில் எவ்வளவு பார்ப்பனரல்லாதார்கள் படித்தார்கள்? அதை எதற்கு உபயோகப்படுத்துகின்றார்கள்? என்பவைகளும் கவனிக்கத்தக்கக்கவையாகும். இந்தி பாஷை என்பது தமிழ் மக்களுக்கு விரோதமான ஆரிய பாஷையாகும். அதிலுள்ள வாசகங்கள் முழுவதும் ஆரியப் புராணங்களும் மூடப்பழக்க வழக்கங்களும் கொண்டதும் பார்ப்பனர்களின் உயர்வுக்கு ஏற்படுத்தப்பட்டதுமாகும். இந்த நாட்டில் இப்போது சமஸ்கிருதம் இருப்பது போலவும் அது உபயோகப்படுவது போலவும் இந்தி ஒரு சிறிதும் தேவையில்லாததாகும். அப்படி இருந்தாலும் அது ஏதாவது வடநாட்டுக்குப் போய் வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக் காவது உதவுமா? என்று பார்ப்போமானால் அப்படியும் சொல்லுவதற்கில்லாமல் இதுவரை இந்தி படித்தவர்களில் 100க்கு 95 பேர் பார்ப்பனர்களே படித்து அந்த படிப்பைக் கொண்டு வடநாட்டுக்கு உத்தியோகத்திற்கோ பிச்சைக்கோ சென்று அதன் மூலம் பார்ப்பனரல்லாதார்களுக்கு துரோகம் செய்யவே உதவப்பட்டு வருகின்றது. அதற்காக சம்பாதித்த பணங்கள் முழுவதும் பார்ப்பன ஆதிக்கத்திலேயே இருந்து வருகின்றது. ஒரு சமயம் பார்ப்பனரல்லாதார்களும் இந்தி படித்திருப்பதாக வைத்துக் கொண்டாலும் இந்த நாட்டில் அவர்களுக்கு அது என்ன பயனைக் கொடுக்கக் கூடும். இது வரை ஹிந்தி படித்த பார்ப்பனரல்லாதாரில் எவராவது அதனால் இன்ன பிரயோஜனம் அடைந்தார்கள் என்று ஏதாவது ஒரு சின்ன உதாரணமாவது காட்ட முடியுமா?

இந்தியாவுக்கு ஒரு பொதுப் பாஷை வேண்டுமானாலும் அல்லது வியாபாரத்திற்கு ஒரு பொதுப் பாஷை வேண்டுமானாலும் ஆங்கில பாஷையை தெரிந்து எடுத்து அதை எல்லா மக்களிடையிலும் பரப்ப முயற்சிக்க வேண்டுமேயல்லாமல் வேறு பாஷையைப் பற்றி யோசிப்பது முட்டாள் தனமோ அல்லது சூழ்ச்சியோதான் ஆகும். இங்கிலீஷ் உலக பாஷை, உலக வியாபாரப் பாஷை, இந்திய அரசாங்க பாஷை. அது மாத்திரமல்லாமல் மூடப்பழக்க வழக்கமும் பார்ப்பனீயமும் இல்லாமல் அவ்வளவும் அடிப்படையான கலைகளை வசமாக்கிய பாஷையாகும்.

இவைகள் மாத்திரமல்லாமல் இந்தி, உருது முதலிய பாஷைகளை தாய்ப் பாஷையாகக் கொண்ட துருக்கி பாஷைகூட இங்கிலீஷ் பாஷைக்கும் இங்கிலீஷ் எழுத்துக்குமே மதிப்பு கொடுத்து தனது தாய்ப் பாஷையை மாற்றிவிட்டது. அன்றியும் நமது இங்கிலீஷ் அரசாங்கம் உள்ளவரை-மேல் நாடுகளின் வியாபார சம்மந்தமோ கலை சம்மந்தமோ கல்வி சம்மந்தமோ உள்ள வரை- இங்கிலீஷ் இல்லாமல் முடியவே முடியாது. இப்படியெல்லாம் இருக்க, இதை சற்றும் கவனியாமல் இப்போது தமிழ்நாட்டில் இந்தி பாஷை பரப்ப வந்திருப்பதென்பது தற்காலம் தமிழ்நாட்டில் உள்ள உணர்ச்சியை ஒழிக்கச் செய்யும் சூழ்ச்சியேயாகும். ஆதலால் இதற்கு எந்த பார்ப்பனரல்லாதாராவது பணம் கொடுத்தால் அது பெரிய சமூகத் துரோகமேயாகும்.

**குடி அரசு – தலையங்கம் – 20.01.1929**

# பாராட்டுகிறோமய்யா, பட்டு தீட்சிதரே!

அரசின் அறநிலையத் துறை கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்படாமல் பல கோடி ரூபாய் சொத்துகளைக் கொண்ட தில்லை நடராசன் கோயில் பார்ப்பன தீட்சதர்களின் முழுக் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அரசு நிர்வாகத்தில் சில காலம் இருந்தபோது வசூலான உண்டியல் தொகையில் நூறில் ஒரு சதவீதம்கூட இப்போது கணக்கில் வருவது இல்லை; தீட்சதர்கள் சுருட்டிக் கொண்டு விடுகிறார்கள்.

அரசு அதிகாரி மேற்பார்வையின் கீழ் கோயில் நிர்வாகம் கொண்டு வரப்பட்ட போது அதை எதிர்த்து தீட்சதப் பார்ப்பனர்கள் உச்சநீதிமன்றம் போனார்கள். அவர்களுக்காக வாதாடியவர் சுப்பிரமணியசாமி. தமிழகத்தில் முதல்வராக இருந்த ஜெயலலிதாவை நேரில் சந்தித்து தீட்சதப் பார்ப்பனர்கள் சரிகட்டி விட்டார்கள். அதனால் உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு தரப்பு இந்த வழக்கில் உறுதியாக எதிர் வழக்காடாமல் கண்டு கொள்ளாமல் அலட்சியம் காட்டியது.

தீட்சதர்களுக்கு வாதாடிய சுப்பிரமணிய சாமியும் எதிர்த்து வாதாடிய தமிழ்நாடு அரசு வழக்கறிஞர்களும் கைகோர்த்தே நின்றார்கள். ‘தீட்சதர்கள் மானுடப் பிறவிகள் அல்ல; அவர்களின் மூதாதையர் வானுலகில் இருந்து இறைவனால் அனுப்பி வைக்கப்பட்ட ‘பூ தேவர்கள்’ (அதாவது பூமியில் பக்தி சேவையாற்ற இறைவனால் அனுப்பி வைக்கப்பட்டவர்கள்). அத்தகைய பூதேவர்கள் கட்டுப்பாட்டிலுள்ள நடராசன் கோயிலை அரசு நிர்வாகம் செய்ய உரிமை இல்லை என்பதே தீட்சதர்கள் வாதம். உச்சநீதிமன்றமும் இந்த வாதத்தை ஏற்றுக் கொண்டது. மீண்டும் ‘தீட்சதர்’ கொள்ளைக்கு கதவு திறந்துவிடப்பட்டது.

‘ஆகம விதிகளில்’ ஓர் ‘அச்சுப் புள்ளியை’க்கூட மீறக் கூடாது. அது தெய்வ குற்றமாகிவிடும் என்று தீட்சதர்கள் கூறி வருகிறார்கள். ஆறுமுகனார் என்ற சைவ முதியவர் தில்லை நடராசர் கோயிலுக்குள் ‘தேவாரம்’ தமிழிசையைப் பாடினார் என்பதற்காக ஆண்டவன் காதில் தமிழ் ஓசை கேட்பது பாவம் என்ற கூறி அவரை அடித்து உதைத்து வெளியே தள்ளியது தீட்சதர்கள் கூட்டம். ஆறுமுகனார் தமிழிசையைப் பாடுவதற்கு வாழ்நாள் முழுதும் போராடினார். பகவான் காதுகளில் தமிழ்ப் பாட்டு கேட்க முடியாத ஒரு ‘ஒதுக்குப்புற’ இடத்தில் சில நிமிடங்கள் தமிழ் பாடலைப் பாடிவிட்டுப் போ என்று சென்னை நீதிமன்றத் தீர்ப்புக் காரணமாக ‘கருணை’ காட்டினார்கள் தீட்சதர்கள்.

அப்படி தீட்சதர்களால் திண்டுக்கல் பூட்டு போட்டு கட்டிக்காத்த ஆகமவிதி ‘அவாள்’ சுரண்டல் என்று வரும்போது காற்றில் பறந்து விடுகிறது.

இந்தக் கோயிலில் ‘ஆயிரங்கால் மண்டபம்’ என்று ஓர் இடம். இது தீட்டுப்படக் கூடாத புனித இடம் என்று தீட்சதர்கள் கூறி வருகிறார்கள். நடராசனை நகைகளால் மலர்களால் அலங்கரித்து வேதமந்திரம் ஓதி, இந்த ஆயிரங்கால் மண்டபத்துக்குக் கொண்டு வருவார்கள். ஆண்டுதோறும் ஆனி திருமஞ்சனம், மார்கழி ஆருத்ரா தரிசனம் என்ற பெயரில் இந்த விழா நடக்கும். இதில் வேறு எந்த நிகழ்ச்சிகள் நடந்தாலும் ‘புனிதம்’ கெட்டுப் போய்விடும் என்று கூறி வந்தார்கள். சேக்கிழார், பெரிய புராணத்தை இங்கே அரங்கேற்றியதாக கூறப்படுகிறது. ஆனால் கம்பரின் இராமாயணத்தை அரங்கேற்ற அனுமதிக்கவில்லை. காரணம் இராமாயணம், வைணவர்களின் நூல். எந்த நூலை எங்கே அரங்கேற்றலாம் என்பதை ‘நூல்’ தானே தீர்மானிக்கும்?

இப்போது அதே ஆயிரங்கால் மண்டபத்தில் ‘சூத்திர’ தொழிலதிபர் இல்லத் திருமணம் மின் விளக்கு அலங்காரம், தட புடலான விருந்துகளோடு தீட்சதர்கள் சம்மதத்தோடு நடந்திருக்கிறது. ஏதோ ஒரு ‘தீட்சதர்’ தொழிலதிபர்களால் நன்றாகக் **‘கவனிக்கப்பட்ட’க்** காரணத்தால் அவர் அனுமதி அளித்து விட்டார் போலும். தீட்சதர்கள் சங்கம் இது பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்று ஒதுங்கிக் கொண்டது. பட்டு தீட்சதர் என்பவர் மட்டும் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளாராம். தில்லை நடராசன் கோயிலில் காலங்காலமாக இவர்கள் ‘கடவுளைக் காட்டி’ மக்களை மிரட்டி வந்த ஆகம - சாஸ்திர விதிகளை ஒரே ஒரு ஒற்றைப் பார்ப்பனரால் மாற்றிவிட முடியும். அவ்வளவு அதிகாரம் அவாளுக்கு இருக்கிறது!

பக்தர்கள் சாஸ்திரம் மீறப்பட்டு விட்டதே என்று அதிருப்திக்கு உள்ளாகி யிருப்பதாக பத்திரிகைகள் செய்தி வெளியிடுகின்றன.

நம்மைப் பொறுத்த வரை பட்டு தீட்சதருக்கு மாலை போட்டு வாழ்த்து கூறவே விரும்புகிறோம். ஆயிரங்கால் மண்டபத்துக்குள் ஒரு ‘சூத்திரர்’ வீட்டுத் திருமணத்தை நடத்த அனுமதித்துள்ளாரே, அதற்காகத்தான்!

ஆகம விதிகள் என்பதெல்லாம் சுத்தப் புரட்டு. அதற்கும் ஆண்டவனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இதோ ‘சூத்திரர்’ வீட்டுத் திருமணம் நடந்திருக்கிறதே! நடராஜன் ருத்ர தாண்டவமாடி திருமணத்தை நிறுத்தி விட்டானா? இல்லையே!” என்பதை செயல்முறையோடு உணர்த்தியிருக்கிறார், பட்டு தீட்சதர்.

‘பட்டு தீட்சதரே! உங்களின் ஆகம எதிர்ப்புத் திருப்பணிகள் தொடர வாழ்த்துகிறோம். அதேபோல் அனைத்து ஆகவிதிகளையும் மீறிக் காட்டுங்கள்; புரட்சி ‘பூதேவர்’ என்றுகூட விருது வழங்கத் தயார்! ‘பூதேவர்கள்’ எதைச் செய்தாலும், சரியாகத்தானே இருக்கும்?

நம்முடைய இந்து முன்னணிகள் ‘கூஜா’ பார்ப்பனர்கள்கூட ‘தெய்வ நிந்தனை’, ‘மதக் குற்றம்’ என்று எதுவும் பேசாமல் பசை போட்டு வாயை ஒட்டிக் கொண்டிருக்கிறார்களே, கவனித்தீர்களா?

ஆமாம், தீட்சதர்களின் ‘ஆகம-சாஸ்திர’ நிந்தனைகூட தெய்வாம்சம்தான் இருக்கும் இதையும் நாம் நம்ப வேண்டும்; நம்ப மறுத்தால் ‘இந்து விரோதி’. காரணம் அவாள், பூதேவர்கள்!

**–கோடங்குடி மாரிமுத்து**

# கோமா நோயாளிக்கு வேதம் ஓதி சிகிச்சையாம்

தலையில் அடிபட்டு, நினைவு தப்பி ‘கோமா’ நிலையில் இருக்கும் நோயாளிகளுக்கு, மந்திரங்களை ஓதி சிகிச்சை அளிக்கும் விபரீத வேலையில், மத்திய பாஜக அரசின் தலைமையிலான நாட்டின் உயர் மருத்துவ ஆராய்ச்சி அமைப்பு (The IndianCouncil of Medical Research -ICMR) ஈடுபட்டுள்ளது. இந்த விபரீதத் திட்டத்திற்கு ஆராய்ச்சி என்ற பெயரில், ஓராண்டு, ஈராண்டு அல்ல, கடந்த 3 ஆண்டுகளாக, மாதம் ரூ. 28 ஆயிரம் விகிதம் நிதி ஒதுக்கீடும் வழங்கியுள்ளது. அதுவும் ஏதோ ஒரு மருத்துவமனையில் அல்ல, நாட்டின் புகழ்பெற்ற தில்லி ராம் மனோகர் லோகியா மருத்துவமனையில்தான் இந்த அவலம் அரங்கேற்றப்பட்டு உள்ளது. ரிக் வேதத்தில் இடம்பெற்ற ‘மகாமிரித்யுன்ஜயா’ என்ற மந்திரத்தை ஓதுவதன் மூலம், நோயாளியின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படுத்த முடியும் என்று, டாக்டர் அசோக் குமார் என்பவர் கூறியுள்ளார். இதற்காக ஆராய்ச்சித் திட்டம் ஒன்றை உருவாக்கி, ஐசிஎம்ஆர் அமைப்பிடம் விண்ணப்பமும் அளித்துள்ளார்.

முதலில் ‘எய்ம்ஸ்’ மருத்துவமனையில் இதற்காக விண்ணப்பித்தபோது, இது அறிவியலுக்குப் புறம்பானது என்று, திட்ட முன்வரைவு நிராகரிக்கப்பட்டு உள்ளது. ஆனாலும், ஐசிஎம்ஆர் அமைப்பிற்கு விண்ணப்பித்து, ராம் மனோகர் லோகியா மருத்துவமனை மூலம் நினைத்ததைச் சாதித்துக் கொண்டுள்ளார் டாக்டர் அசோக் குமார். அவருக்கு ஐசிஎம்ஆர் அமைப்பு கடந்த 3 ஆண்டுகளாக மாதத்தோறும் ரூ. 28 ஆயிரம் நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளது.

## கல்வியாளர் பிரின்ஸ் கஜேந்திரபாபு விளக்கம்

# தேர்வு நடத்துவதை தனியாருக்கு வழங்கும், புதிய கல்விக் கொள்கை

*புதிய கல்விக் கொள்கை - இடஒதுக்கீடு குறித்தோ ஜாதி பிரச்சினைப் பற்றியோ பேசாமல் மூடுவதற்கான பரிந்துரைகளையே வலியுறுத்துகிறது என்றார் கல்வியாளர் கஜேந்திர பாபு. (சென்ற இதழ் தொடர்ச்சி)*

பொதுத் தேர்வு முறையை சொல்கிறார்கள் அல்லவா, இப்போது 10 ம் வகுப்பு தேர்வுகளை யார் நடத்துகிறார்கள்?

தமிழ்நாட்டில் அரசு 10 மற்றும் 12 ம் வகுப்பிற்கு தேர்வுகளை நடத்துகிறது. இதில் போதுமான மதிப்பெண் வரவில்லையென்றால் ஒரு மாணவர் தனது தேர்வுத் தாளை மறு கூட்டலுக்கு அனுப்பலாம். திருத்தியதையும் புகைப்படமாக பார்க்கலாம். தமிழ்நாட்டில் ஓரளவிற்கு தேர்வு முறை ஊழல் இல்லாமல் நடக்கிறது. பறக்கும் படை போன்றவைகளும் தேர்வு நேரங்களில் கண்காணிப்பில் உள்ளன. இந்தக் கொள்கை என்ன சொல்கிறதென்றால்? மாநில தேர்வு முறை, மத்திய தேர்வு முறை மட்டுமில்லாமல் தனியார் கம்பெனிகளும் தேர்வு முறைக்கு விண்ணப்பித்து அனுமதியை வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்கிறது. மாநிலத்திலோ அல்லது மத்திய அரசிடமோ விண்ணப்பித்து அந்த உரிமத்தைப் பெற்றுக் கொள்ளலாம். தனியாருக்கு தேர்வு நடத்த அனுமதி கொடுத்தால் வெளிநாட்டிலிருந்து ஆட்களை வரவழைப்பார்கள். தன்னுடைய தேர்வு முறை தான் சிறந்தது என்று விளம்பரப்படுத்துவார்கள்.



பிரின்ஸ் கஜேந்திரபாபு

இது போன்ற விளம்பரங்கள் மூலமாக, ஒரு பள்ளியில் இது போன்ற தனியார் தேர்வு முறை தான் நடக்கிறதென்று அந்த பள்ளி விளம்பரம் செய்தால் அங்கு தான் அதிக மாணவர்களை மக்கள் சேர்ப்பார்கள். அப்போது அரசாங்கத்திடம் மட்டும் இருந்த தேர்வு முறைகளை பள்ளிகளே தீர்மானித்துக் கொள்ளலாம் என்ற நிலைக்கு இதன் மூலம் கொண்டுவந்துவிடுவார்கள். பாடப்புத்தகங்கள் மற்றும் பாடங்கள் வரை தேசிய அளவில் இருக்கும். அரசிடம் தேர்வை நடத்த கோரவில்லையென்றால் அரசு தேர்வு இயக்ககம் மூடப்படும் நிலைக்கு வந்துவிடும். பள்ளிகள் இணைப்பு, கல்லூரிகள் இணைப்பு அது மட்டுமில்லாமல் தேர்வுகளையும் தனியார் நடத்தலாம் என்று சொல்கிறார்கள். அரசமைப்புச் சட்டத்தில், பல்கலை கழகங்களை உருவாக்குதல், கலைத்தல் போன்றவைகள் மத்திய அரசுக்கு உரிமை இல்லை என்று கூறுகிறது. அதே அரசமைப்புச் சட்டத்தில் பல்கலைக் கழகங்களை உருவாக்குதல், ஒழுங்குபடுத்துதல், கலைத்தல் போன்றவைகளின் உரிமை மாநில அரசுக்கு உள்ளது என்று கூறியுள்ளது.

2016இல் நடந்த Modern Dental Collage வழக்கில் கூட மாநில அரசிற்கு தான் உரிமையுள்ளது என்று நீதிபதிகள் கூறியிருக்கிறார்கள். இந்த கல்விக் கொள்கையில், பள்ளிகளை இணைப்பது, கல்லூரிகளை இணைப்பது, பல்கலைக் கழகங்களை வேறு வடிவத்திற்கு மாற்றுவது போன்றவைகளைப் பற்றி மத்திய அரசே முடிவுகளை எடுக்கும் அதிகாரம் கொண்டுள்ளது. இதனால் மாநில அரசின் உரிமைகளை மத்திய அரசு பறிக்கிறது. அம்பேத்கர், நவம்பர் 25, 1949 ல் அரசமைப்புச் சட்டத்தை தொகுத்து நாடாளுமன்றதில் பேசும் போது சொல்கிறார், "மாநில அரசிற்கு கொடுக்கப்பட்ட உரிமை அரசமைப்புச் சட்டத்தால் கொடுக்கப்பட்டது. மத்திய அரசாங்கம் இயற்றிய சட்டத்தினால் அல்ல. எனவே, மாநில அரசு மற்றும் மத்திய அரசிற்கான அதிகாரப் பகிர்வை மத்திய அரசு நினைத்தால் மாற்றிவிட முடியாது. நீதிமன்றங்களும் தலையிட முடியாது" என்று கூறுகிறார்.

ஆனால் இந்தக் கல்விக் கொள்கை மத்திய அரசிற்கு அதிகாரத்தை வழங்க வழிவகை செய்கிறது. எனவே, இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவம் கேள்விக்குள்ளாகியிருக்கிறது, மாநில அரசின் உரிமை பறிபோகிறது, இட ஒதுக்கீடு மறுக்கப்படுகிறது, சமூக நீதி மறுக்கப்படுகிறது. எனவே, இந்தக் கொள்கையைப் பற்றி. நீங்கள் தான் விவாதித்து அரசிற்கு கூற வேண்டும். இவ்வளவு கெடுதல் இருக்கிறதே பிறகு இந்தக் கொள்கை யாருக்குத்தான் சாதகமாக இருக்கும்? World Trade Organisationஇல் Trade in Service என்ற 200 பக்கங்கள் கொண்ட ஆவணம் உள்ளது. இந்த ஆவணத்தில் என்னவெல்லாம் கேட்கப்பட்டதோ அவையெல் லாம் இந்தக் கல்விக் கொள்கையில் உள்ளது. உலக வர்த்தக அமைப்பு (WTO) உதவித் தொகையை கேட்கிறது, அதனால் வெளிநாடு மற்றும் இந்திய மாணவர்களுக்கும் கொடுப்பாதாக உள்ளது விரைவில். முக்கியமாக, நீதிமன்றத்திற்கு போகக் கூடாது என்று WTO இல் உள்ளது.

ஏனென்றால் நீதிமன்றத்திற்கு சென்றால் விதிகள் அரசமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டதா என்று கேட்பார்கள். அதனால் நீதிமன்றத்தை அணுகக் கூடாது என்று உள்ளது. அதற்காகத்தான், பிரதமர் தலைமையிலான குழுவே எல்லா கொள்கை முடிவு களையும் மற்றும் அமைப்பையும் உருவாக்குகிறது. மாநில அரசின் குழு இருந்தாலும், தேசிய கல்வி ஆணையம் எதை பரிந்துரைக்கிறதோ அதை நிறைவேற்றும் ஒரு குழுவாகத்தான் இருக்கும். எனவே அரசமைப்புச் சட்டத்திற்கே சவால் விடக் கூடிய ஒரு கொள்கையை உருவாக்கி யிருக்கிறார்கள்.

- நிறைவு

## 'புகுஷிமா' அணுஉலை உருவாக்கிய ஆபத்து தொடருகிறது

**பொறியாளர் சுந்தர்ராசன்**



எது "மோசமாக நடக்கக்கூடும்" என்று சொல்லப்பட்டதோ அது மோசமாக நடந்துகொண்டிருக்கிறது. ஏதோ பகவத் கீதை வசனம் போல் இருக்கிறது என்று நினைக்கவேண்டாம். புகுஷிமா அணுவுலை இப்பூமிக்கு மோசமான ஆபத்தாக முடியும் என்று சொல்லப்பட்டு வந்தது, இப்போது உண்மையாகிவுள்ளது.

2011 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியால் புகுஷிமாவின் மூன்று உலைகள் வெடித்து சிதறின. விபத்து ஏற்பட்டு பல ஆண்டுகள் கழித்து உலைகளை சுத்தப்படுத்தும் பணிகள் துவங்கின. வெப்பத்தையும், கதிர்வீச்சையும் குறைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட நீரும், அணுக்கழிவுகளை சேமித்துவைக்கும் குளங்களில் இருந்த நீரும், அணுவுலைகளுக்குள் புகுந்த தண்ணீரும் என "அதிக கதிர்வீச்சு" கொண்ட நீர் 1000 தொட்டிகளில் சேமித்துவைக்கப்பட்டது. இதுதவிர நாளொன்றிற்கு சுமார் 500 டன் "குறைந்த கதிர்வீச்சு" கொண்ட நீர் பசிபிக் பெருங்கடலில் சென்று சேர்ந்து கொண்டிருந்தது. தினம் தினம் கடலுக்குள் செல்லும் நீரை தடுப்பதற்காக கட்டப்பட்ட "பனிச்சுவர்" முழுமையாக வெற்றிபெறவில்லை, 500 டன் நீர் 100 டன்னாக குறைந்ததே தவிர முழுவதுமாக கட்டுப்படுத்தமுடியவில்லை.

இப்போது 1000 தொட்டிகளில் சேமித்துவைக்கப்பட்டுள்ள நீர் பெரும் பிரச்சனையாக மாறியுள்ளது, இந்த 10,00,000 டன் "அதிக கதிர்வீச்சு" கொண்ட நீரை இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக சேமிக்கமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. அந்த விஷயத்தை கையாள, அந்த தொட்டிகளில் உள்ள நீரை பசிபிக் கடலுக்குள் அனுப்புவது என்று முடிவெடுத்திருப்பதாக ஜப்பான் நாட்டின் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

சேமித்துவைக்கப்பட்டுள்ள நீரில் உள்ள கதிர்வீச்சை நீக்க முயற்சித்தாலும், அதிலுள்ள ஹைட்ரஜனின் ஐசோடோப்பான ட்ரிடியதை நீக்க தேவையான தொழில்நுட்பம் உலகத்தில் எந்த நாட்டிடமும் கிடையாது. சேமிக்கமுடியாமல் போவதால் இப்போது பசிபிக் பெருங்கடலில் கொட்டுவதை தவிர வேறு வழியிருப்பதாக தெரியவில்லை என்கிறார் யோஷியாகி ஹராடா, இன்னும் இறுதி முடிவெடுக்கவிட்டாலும் அதில் போய்தான் முடியும் என்றும் தெரிவித்துள்ளார். விபத்திற்குள்ளான புகுஷிமா அணுவுலைகளை செயலிழக்கசெய்யும் குழுவை சேர்ந்த ஹிரோஷி மியானோ தாக்கல் செய்துள்ள அறிக்கையின்படி, சேமித்துவைக்கப்பட்டுள்ள தண்ணீரில் உள்ள கதிர்வீச்சை நீக்கி பாதுகாப்பான அளவிற்கு கொண்டுவருவதற்கு குறைந்தது இன்னும் 17 ஆண்டுகளாகும் என்று தெரியவந்துள்ளது. இதனால் பசிபிக் பெருங்கடலில் கொட்டுவதை தவிர வேறுவழி கிடையாது என்று தெரியவருகிறது. பசிபிக் பெருங்கடல் ஏற்கனவே செத்துவிட்டது என்றும், "நாங்கள் பார்த்த சார்டைன்களும், சுறாக்களும் இப்போது பார்க்கமுடியவில்லை" என்று மாலுமிகள் தெரிவித்துள்ளனர். நிலைமை இப்படி இருக்கையில் 10 லட்சம் டன் அதிக கதிர்வீச்சு கொண்டநீர் கடலில் சேர்ந்தால் என்னவாகும் என்ற அச்சம் உலகம் முழுவதும் பரவியுள்ளது. உணவிற்காக தென்கொரியா நாடு பசிபிக் பெருங்கடலை நம்பி இருப்பதால் இதற்கு எதிர்ப்பு தெரிவித் துள்ளது, ஜப்பான் நாட்டை சேர்ந்த மீனவர்களும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். 8 ஆண்டுகளுக்கு முன்னர் பாழாகிப்போன தங்கள் வாழ்க்கையை இப்போதுதான் மீட்டுருவாக்கம் செய்யத்துவங்கியுள்ள மீனவர்கள் இத்திட்டம் தங்களின் வாழ்வாதாரத்தை முழுவதுமாக கெடுத்துவிடும் என்ற அச்சத்திலுள்ளனர்.

டோக்கியோவில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுவதற்கான நேரம் நெருங்கிவருவதால் சர்வதேச சமூகத்தின் நெருக்கடியும் ஜப்பான் நாட்டின் மீது அதிகமாகியுள்ளது. ஆறு ஆண்டுகளுக்கு முன்னர், ஜப்பான் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான முயற்சியில் வெற்றிபெற்றபோதே பிரதமர் ஷின்ஜோ அபே, புகுஷிமாவில் அனைத்து விஷயங்களும் கட்டுக்குள் இருப்பதாக அறிவித்தார். ஆனால் உண்மை வேறுமாதிரியாக உள்ளது.

# கழகத்தில் இணைந்தனர்



தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் ஸ்ரீராம், மாதவன், சுரேஷ், விஜய், சுரண், அசோக்ராஜ், சின்னப்பதாஸ், மாரியப்பன், மணிகண்டன், தமிழ், மணிசேகரன், தேவேந்திரன், அருண் ஆகியோர் திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைந்துள்ளனர். கும்பகோணம் அம்மன்பேட்டை கிளை அமைப்பாளராக ராஜ்குமாரும், கும்பகோணம் நகர அமைப்புச் செயலாளராக அசோக்கும் கழகத்தால் தலைமை ஒப்புதலோடு நியமிக்கப்பட்டனர். தஞ்சை மாவட்டக் கழகத் தலைவரும் தலைமைக் கழகப் பேச்சாளருமான சாக்கோட்டை இளங்கோவன் முயற்சியில் இவர்கள் கழகத்தில் இணைந்துள்ளனர்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# நியூட்டனும் அய்ன்ஸ்டினும் ‘பிரம்மா’வுக்குள் தான் அடக்கம்

மோடி அமைச்சரவையில் பல அறிவுக் கொழுந்துகள் இருக்கிறார்கள். டார்வின் பரிணாம வளர்ச்சி கோட்பாடே தவறு. மனிதர்களை குரங்குகள் என்று பேசலாமா என்று ஆவேசப்பட்டார் முன்னாள் பா.ஜ.க. மத்திய அமைச்சர். அவர் பெயர் சத்யபால் சிங். மகாராஷ்டிராவில் காவல்துறை அதிகாரியாக பணியாற்றியவர். குரங்குகள் இழிவானவை என்று கூறும் இவர்கள்தான் அனுமானை கடவுளாக்கி ‘அனுமான் ஜெயந்தி’யும் கொண்டாடுகிறார்கள். மாற்றுக் கருத்து பேசுவோர் கூட்டங்களில் எல்லாம் கலவரம் செய்யவே சில கும்பல் தமிழ்நாட்டில் அலைந்து கொண்டிருக்கிறது. அப்படி கலவரம் செய்யும்போது அவர்கள் போடுகிற முழக்கமே ‘ஜெய் அனுமான்; ஜெய்காளி’ என்பதுதான்.

இப்போது மத்திய வர்த்தகத் துறை அமைச்சராக இருக்கும் பியுஷ்கோயல் என்பவர் ஒரு அசத்தலான அறிவியல் ஆராய்ச்சியை அவிழ்த்து விட்டிருக்கிறார். “நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்துவிட்டது என்பதற்கு கூறப்படும் புள்ளி விவரக் கணக்குகளை நம்பி விடாதீர்கள். கணிதத்திற்கும் பொருளாதாரத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அதுபோல் கணிதத்துக்கும் அறிவியலுக்கும்கூட சம்பந்தம் இல்லை. புவி ஈர்ப்பு விசையைக் கண்டுபிடித்த அய்ன்ஸ்டின் கணிதம் தெரியாதவர்தானே” என்று ஒரு அதிரடி கேள்வியை எழுப்பி அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறார்.

“அய்யா, புவி ஈர்ப்பு விசையைக் கண்டுபிடித்தது அய்ன்ஸ்டின் அல்ல;அ வரது பெயர் அஸ்சக் நியூட்டன். அய்ன்ஸ்டின் பிறப்பதற்கு முன்பே இன்றிலிருந்து 200 ஆண்டுகளுக்கு முன்பே நியூட்டன் புவி ஈர்ப்பு விசையைக் கண்டுபிடித்து விட்டார்” என்று சுட்டிகாட்டிய பிறகு, “அப்படியா, வாய் தவறி சொல்லிவிட்டதாக வைத்துக் கொள்ளுங்கள்” என்று நழுவி விட்டார். நம்மைக் கேட்டால் ஒரு இலவச யோசனையைத் தருகிறோம். இந்த அமைச்சர்கள் எல்லாம் எதை யார் கண்டுபிடித்தார்கள் என்று மண்டையைப் போட்டுக் குழப்பி, உளறிக் கொண்டிருக்கத் தேவையில்லை .

“எல்லாவற்றையும் கண்டுபிடித்தது உலகைப் படைத்த ‘பிர்மா’தான். அந்த பிர்மாவைக் கண்டுபிடித்து நாட்டுக்கு அறிமுகப்படுத்தியது வேதம் படித்த ‘பிராமணர்கள் தான்’ என்று ஒரே வரியில் கூறிவிட்டால், கதை முடிந்தது. பிறகு எவன் எதிர்த்துப் பேசுவான்? அப்படியே பேசினாலும் இந்து மதத்தைப் புண்படுத்திய தேச விரோதி என்று கூறி தேச விரோத சட்டத்தில் கைது செய்து சிறையில் தள்ளி விடலாம். மோடியின் 100 நாள் சாதனைப் பட்டியலிலும் இந்த அடக்குமுறைகளை ‘மதத்தின் பாதுகாப்பில் உறுதி காட்டிய மோடி ஆட்சி’ என்று கூறி பெருமையடித்துக் கொள்ளலாம்!

எப்படி, சரி தானே?

– இரா

## அண்ணா பிறந்தநாள்: கழகம் மாலை அணிவிப்பு

**மயிலாடுதுறை :** 15.09.2019 அன்று காலை 10 மணிக்கு அண்ணா 111ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, நாகை மாவட்டம் மயிலாடுதுறை பேருந்து நிலையத்தில் உள்ள அண்ணா சிலைக்கு, மாவட்ட தலைவர் மகாலிங்கம் தலைமையில் மாலை அணிவிக்கப் பட்டது. உடன் மயிலாடு துறை கழகத் தோழர்கள் சென்றிருந்தனர். முழக்கங்கள் எழுப்பப்பட்டன.





**கோவை :** 15.09.2019 அன்று காலை 9 மணிக்கு, கழகத்தின் சார்பில் காந்திபுரம் பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கம் எழுப்பப்பட்டது.

வெங்கட், கிருஷ்ணன், அறிவரசு, மாதவன் சங்கர், நிர்மல், கிருஷ்ணமூர்த்தி, செந்தில் வடிவேல், மன்சூர் அலி, ராஜ். மேலும் திராவிட விழுதுகள் அமைப்பைச் சார்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர்.

## கனிமொழி– பத்மநாதன் திருமணம்



கோவை போத்தனூரில் உள்ள சங்கம் திருமண மண்டபத்தில் 8.9.2019 அன்று மாலை 7 மணிக்கு தோழர்கள் கனிமொழி - பத்மநாதன் ஆகியோருக்கு சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. திருமணத்தை கழகத் தலைவர் கொளத்தூர்மணி தலைமையேற்று நடத்தி வைத்தார். திமுகவின் முன்னாள் அமைச்சர்கள் பொங்கலூர் பழனிச்சாமி, அந்தியூர் செல்வராஜ், ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் அதியமான், தி.மு.க. தெற்கு மாவட்ட செயலாளர் தென்றல் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் கார்த்திக் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்தி உரையாற்றினர். திருமணத்தில் கோவை பகுதி திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். திருமணத்தில் கலந்து கொண்ட அனைத்து தோழர்களுக்கும் ‘பெண் ஏன் அடிமையானாள்?’ நூல் வழங்கப்பட்டது.

# அம்பேத்கர்–பெரியார் வாசகர் வட்டத்தில் செயல்பட்ட மாணவர்கள் மீது நடவடிக்கை

சென்னை பல்கலைக் கழகத்தில் 2018ஆம் ஆண்டு இதழியல் துறையில் பட்டம் பெற்றவர் கிருபா மோகன் என்ற மாணவர். இந்த ஆண்டு தத்துவவியல் துறை யில் ‘பவுத்தம்’ தொடர்பான முதுகலைப் பாடப்பிரிவில் சேர்ந்துள்ளார். இவர் இதழியல் துறையில் படிக்கும் போது, அம்பேத்கர் - பெரியார் வாசகர் வட்டத்தின் செயலாளர் ஆவார்.


தற்போது தத்துவவியல் துறையில் ஒரு மாதங்களாக வகுப்பு நடைபெற்ற நிலையில், அந்த துறையின் தலைவர் பேராசிரியர் வெங்கடாஜலபதி, கிருபா மோகனிடம் “நீங்கள் முறை யாக எலிஜிபிலிட்டி சர்டிஃபிகேட் எனப்படும் தகுதிச் சான்றிதழை தரவில்லை. அதனால் உங்களின் சேர்க்கையை இரத்து செய்கின்றோம்” என்று கூறியுள்ளார். ஆனால் கிருபா மோகன் அதே பல்கலையில் முதலில் படித்த காரணத்தால் எலிஜிபிலிட்டி சர்டிஃபிகேட் தேவையில்லை என்று வாதிட்டுள்ளார்.

தன்னுடைய சேர்க்கை இரத்து செய்யப்பட்டதற்கு ஆளுநர் மாளிகையில் இருந்தும், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் தரப்பில் இருந்தும் தரப்பட்ட அழுத்தமே காரணம் என்றும் கிருபா மோகன் கூறியுள்ளார்.

கிருபா மோகன் தற்போது அம்பேத்கார் - பெரியார் வாசிப்பு வட்டத்தில் ஒரு உறுப்பினர் மட்டுமே. ஆனால் அவர் இளங்கலை படிக்கையில் அவ்வாசகர் வட்டத்தின் செயலாளராக பணியாற்றியபோது, பல்கலைக்கழகத்திற்கு தருண் விஜய் மற்றும் இல. கணேசன் வருகை புரிந்தபோது போராட்டங்கள் நடத்தப் பட்டன. மாட்டுக்கறிக்கு விதிக்கப்பட்ட தடைக்கு எதிராகவும், புதிய கல்விக் கொள்கைக்கு எதிராகவும் மாணவர்களுடன் சேர்ந்து போராட்டம் நடத்தியுள்ளார்.

ஒரே பல்கலைக் கழகத்தின் ஒரு துறையில் இருந்து மற்றொரு துறைக்கு மாற்றல் ஆகும் போது மாற்றுச் சான்றிதழ் தேவையில்லை. ப்ரொவிஷனல் சர்டிஃபிகேட் மட்டுமே போதும் என்று துறைத் தலைவர் கூறினார். ஆனால் ஆகஸ்ட் 29ஆம் தேதி என்னுடைய சேர்க்கை இரத்து செய்யப்பட்டுள்ளது என்று அவரே கூறிய தாக கிருபா மோகன் தெரிவித்து உள்ளார்.


## வெளிவந்து விட்டது
**‘நிமிர்வோம்’ – செப்டம்பர் 2019 இதழ்**




மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...

தனி இதழ் விலை : ரூ.20

தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.

தொலைபேசி எண்: 044 24980745 / 7299230363 / 7373684049

www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com


Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 19th September 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN